நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி. எண்.150/2019**

2021ம்ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சந்தோஷ்குமார்** | **வயது** | : | **25** |
| **த/பெ.** | : | **பரசுராமன்** | **தொழில்** | : | **தனியார் நிறுவனம்** |
| **ஊர்** | : | **பால்னாங்குப்பம்** | **சமயம்** | : | **இந்தியன்** |
| **வட்டம்** | : | **திருப்பத்தூர்** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : | **திருப்பத்தூர்** | | | |

முதல் விசாரணை:-

நான் பால்னாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் போச்சம்பள்ளி சிப்காட்டில் தனியார் நிறுவனத்தில் பணி செய்கிறேன். இதற்கு முன்பாக நான் ஐந்து வருடங்கள் 2019ம்வருடம் வரை ஜோலார்பேட்டை ரயில் நிலைய கேண்டீனில் விற்பனையாளராக பணி செய்தேன். சுமார் 2 1/2 வருடங்களுக்கு முன்பு எனக்கு தேதி மாதம் நினைவில்லை. காலை சுமார் 06.00 மணியளவில் நானும் பழனி என்பவரும் திருவனந்தபுரம் ரயிலுக்கு உணவு எடுத்துக்கொண்டு சென்றோம். ரயில் தாமதமாக வந்தது. 3வது பிளாட்பாரத்தில் சென்றுக்கொண்டிருந்தோம். அப்போது ரயில்வே போலீசார் எங்களை அழைத்தார்கள். 10 அடி தொலைவில் ரயில்வே காவல் நிலையம் இருந்தது. நானும் பழனியும் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கே அப்போது ஒரு பெண்மணியை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். (எதிரி பகலம்மாள் மனுவின் பேரில் ஆஜர் இல்லை). போலீசார் அந்த பெண்மணியை விசாரிக்கும்போது சாட்சி வேண்டும் என்பதால் எங்களை அழைத்ததாக சொன்னார்கள். போலீசார் விசாரணையின் போது அந்த பெண்மணி தங்கம் குறித்து சொல்லிக்கொண்டிருந்தர். அப்போது நான் பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தேன். அந்த பெண்மணி கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்துக்கொண்டிருந்தார்கள். அந்த பெண்மணி நகைகளை வேலூரில் ஒரு இடத்தில் வைத்துள்ளதாக அழைத்துச்சென்றால் எடுத்து கொடுப்பதாக சொன்னார். பின்னர் போலீசார் பதிவு செய்துக்கொண்ட அந்த வாக்குமூலத்தில் என்னிடம் சாட்சி கையெழுத்து

வாங்கினார்கள். எதிரி பகலம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.3 ஆகும். அதன் பிறகு எதிரி பகலம்மாளுடன் என்னையும் பழனியையும் போலீசார் அவர்களுது வாகனத்தில் வேலூருக்கு அழைத்துச்சென்றார்கள். பகலம்மாள் ஒரு ஓடு வீடு மற்றும் கூரை வீடு இருந்த இடத்திற்கு அழைத்துச்சென்றார். அவர் அந்தஇடத்தில் மறைத்து வைத்திருந்த தங்க கட்டி எடுத்து ஆஜர் செய்தார். போலீசார் என் முன்னிலையில் அதனை கைப்பற்றிக்கொண்டார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

1, மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.4 ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி. எண்.150/2019**

2021ம்ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.5 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **வெங்கடேசன்** | **வயது** | : | 42 |
| **த/பெ.** | : | **மணி** | **தொழில்** | : | ரயில்வே கேண்டீன் |
| **ஊர்** | : | **காட்பாடி** | **சமயம்** | : | **இந்தியன்** |
| **வட்டம்** | : | **காட்பாடி** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : | **வேலூர்** | | | |

முதல் விசாரணை:-

நான் காட்பாடியில் வசிக்கிறேன். காட்பாடி ரயில் நிலைய கேண்டீனில் விற்பனையாளராக உள்ளேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு தேதி மாதம் நினைவில்லை. காலை 06.00 மணி இருக்கும் காட்பாடி ரயில்வே போலீசார் என்னையும் மற்றொரு கேண்டீன் விற்பனையாளர் தமிழரசனையும் அழைத்தார்கள்.இருவரும் காட்பாடி ரயில்வே காவல் நிலையம் சென்றோம்.அப்போது போலீசார் ஒரு பெண்மணியிடம் விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் விசாரித்துக்கொண்டிருந்த நபர் ஆஜரிலுள்ள 1ம்எதிரி அலமேலு ஆகும். போலீசார் அவரை விசாரித்து பதிவு செய்துக்கொண்டார்கள். நான் அதற்கு சாட்சியாக கையெழுத்து போட்டேன். அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் போது 1ம் எதிரி அலமேலு நகைகளை ரயிலில் திருடியதாக வாக்குமூலம் அளித்தார்.ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் நகைகளை ஒளித்துவைத்திருக்கும் இடத்திற்கு அழைத்துச்சென்றால் எடுத்து ஆஜர் படுத்துவதாக சொன்னார். அதன் பேரில் போலீசார் என்னையும் தமிழரசனையும் 1ம் எதிரியுடன் அழைத்துக்கொண்டு ஒருஇடத்திற்கு சென்றார்கள். அந்த இடத்தில் எதிரி ஒளித்து வைத்திருந்த நகையை எடுத்து ஆஜர் படுத்தினார். அதற்கு சாட்சியாக என்னிடம் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.5 ஆகும். கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

1, மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.5 ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.